தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.

தொலைபேசி எண்.044–2951 5590

ஆணை நாள். 18.11.2026
காணொளி காட்சி விசாரணை

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : SA 14167/A/2024

திரு. துரை குணா .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கறம்பக்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் – 622 302. .. பொது அதிகார அமைப்பு

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 18.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. துரை குணா அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.ந. முருகேசன், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கறம்பக்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 25.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி தேர்வு நிலை பேரூராட்சிக்கு தொடர்புடைய பங்களா குளம் சர்வே எண் 161, 24.07.2024 தேதி அன்று வருவாய் துறையால் அளவீடு செய்யப்பட்ட அளவை சான்று மற்றம் குளத்தின் வரைபடம், சிட்டா அடங்களின் ஒளி நகல்,

ஆக்கிரமிப்புளரின் முழு முகவரி கொண்ட பட்டியல் என்பது போன்ற தகவல்களை 2 இனங்களில் தகவல் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 21.08.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர், 31.08.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 01.11.2024 நாளிட்ட பிரிவு 19(3)-ன் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.. அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 18.11.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து காணொளி காட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 13.11.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக அனைத்து இனங்களுக்கான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், மனுதாரரும் 13.11.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களைப் பெற்றுக் கொண்டதாக ஒப்புதல் கடிதம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது, இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்



வழக்கு எண். SA-14167/A/2024
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கறம்பக்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 302.

மனுதாரர்:
திரு. துரை குணா,
72, கீழண்ட வீடு,
குளந்திரான்பட்டு,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 302.

DESPATCHED

Copy to File
Je/PA 19.11.2026